## பதிவு செய்யும் முறை

தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகள் இளங்கலை கல்வியியல் (பி.எட்.) பட்டப்படிப்பு சேர்க்கை - 2025 (TNGASAEDU - 2025) என்பது இணையவழி வாயிலாக நடைபெறும் விண்ணப்ப செயல்முறையாகும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப தகவல்களைப் பதிவு செய்தல், பதிவு கட்டணத்தை செலுத்துதல், சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்தல், விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்தல், விருப்பமான கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்தல், ஒதுக்கீடு மற்றும் உறுதிப்படுத்தல் ஆகிய அனைத்தையும் இணையதளத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டும். இந்த கலந்தாய்வு செயல்முறை பின்வரும் படிகளை உள்ளடக்கியதாகும்:

- விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய, விண்ணப்பதாரர்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்தும் இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம்.
- இணையதள வசதி இல்லாதவர்கள், அருகிலுள்ள தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் அமைந்துள்ள மாணவர் சேர்க்கை உதவி மையம் (Admission Facilitation Center - AFC 2025) மூலமாக விண்ணப்பிக்கலாம்.
- தரவரிசை பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்படும்.
- விண்ணப்பதாரர்கள் விருப்பமான கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளை விருப்ப வரிசைப்படி பதிவுசெய்ய வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் பதிவு செய்த விருப்ப வரிசை, இன ஒதுக்கீடு மற்றும் தரவரிசையின் அடிப்படையில் ஒதுக்கீடு ஆணை இணையதளத்திலேயே வழங்கப்படும்.
- பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி, விண்ணப்பதாரர்கள் ஒதுக்கீடு ஆணையை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.
- ஒதுக்கீடு செய்யப்பட்ட கல்லூரிக்கு நேரில் சென்று சேர்க்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பதாரர்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து செயல்முறைகளையும் மற்றும் அவை செய்யப்பட வேண்டிய நாள்களை கவனமாகப் பின்பற்றி, உரிய முறையில் செயல்பட வேண்டும். இந்த அனைத்து செயல்முறைகளுக்குமான முதற்கட்டமாக, விண்ணப்பத்தை இணையதளத்தில் பதிவு செய்வதே மிகவும் முக்கியமானதாகும். அந்த பதிவை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை இக்குறிப்பு விரிவாக விளக்குகிறது.


- **பயனாளர் பதிவு செய்தல்**

இப்போது நாம் விண்ணப்பம் பதிவு செய்வது எப்படி என்று பார்க்கலாம். பதிவு செய்தலை எளிதாக்க, அது பல எளிய படிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படிகளை கவனமாக தொடருங்கள். முதலாவதாக www.tngasa.in என்ற இணையதளத்திற்கு செல்லவும். தற்பொழுது நீங்கள் கீழே காணும் கணினி பக்கத்தை காண்பீர்கள். விண்ணப்ப பதிவு என்பது கீழே பட்டியலிடப்பட்டுள்ள பின்வரும் படிகளைக் கொண்டுள்ளது:

| |
|---|
| 1. பயனர் பதிவு |
| 2. உள்நுழைவு |
| 3. பகுதி I – தனிப்பட்ட தகவல்கள் பூர்த்தி |
| 4. பகுதி II – சிறப்பு ஒதுக்கீட்டு தகவல்கள் பூர்த்தி |
| 5. பகுதி III – கல்வித் தகவல்கள் பூர்த்தி |
| 6. பகுதி IV – பட்டம் தொடர்பான மதிப்பெண்கள் பதிவு |
| 7. பகுதி V – தகவல்களின் முன்னோட்டம் |
| 8. பகுதி VI – கட்டணம் செலுத்தல் |
| 9. பகுதி VII – விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்தல் |
| 10. பகுதி VIII – சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்தல் |
| 11. பகுதி IX – விருப்பத் தேர்வு (Choice Filling) |
| 12. பகுதி X – ஒதுக்கீடு மற்றும் உறுதிப்படுத்தல் |





இதில் **"Click here to new Registration"**என்பதை கிளிக் செய்யவும். இப்போது கீழ்க்காணும் இணைய பக்கம் கணினி திரையில் தோன்றும். அதில் “Registration” என்ற பகுதியில் செய்ய வேண்டிய செயல் என்ன என்பதை தற்போது காட்டுகிறது. விண்ணப்பப் பதிவு பயனாளர் பதிவுக்கான விவரங்கள் பதிவிடல் மேற்கண்ட இணைய பக்கத்தில் உள்ள எல்லா விவரங்களையும் சரியாக பதிவு செய்யவும். விவரங்களை பதிவிட மேற்கண்டவற்றை மனதில் கொள்ளவும்.





1. உங்கள் பெயரை, உங்கள் 10 / +2 மதிப்பெண் சான்றிதழில் உள்ளது போன்று பதிவு செய்யவும்.

2. கொடுக்கப்பட்ட கைபேசி **(Smart Phone)** எண், உங்கள் பதிவு செய்யப்பட கைபேசி எண்ணாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லா குறுந்தகவல்களும் அனுப்பப்படும்.
3. மின்னஞ்சல் முகவரி என்பதில் உங்களது சரியான மின்னஞ்சல் முகவரியைக் (Email ID) கொடுக்கவும். உங்களுக்கான மின்னஞ்சல் முகவரி இல்லாவிட்டால் புதிதாக ஒன்றை உருவாக்கி, பின் பதியவும். மின்னஞ்சல் முகவரி உருவாக்குவதில் சிரமம் இருந்தால் உங்கள் பெற்றோரின் மின்னஞ்சலைப் பயன்படுத்தலாம். இந்த மின்னஞ்சல் முகவரியே உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லாத் தகவல்களும் அனுப்பப்படும்.
4. மீண்டும் மின்னஞ்சல் முகவரியை உறுதி செய்யவும்.
5. உங்களது பிறந்த தேதியை தேர்வு செய்யவும்.
6. உங்களது கடவுச்சொல்லை **(Password)** கவனமாக உருவாக்கிக் கொள்ளவும். கடவுச் சொல்லானது குறைந்தது ஆறு எழுத்துகளைக் கொண்டது. அதில் குறைந்தது ஒரு எழுத்து எண்ணாகவும், ஒரு எழுத்து சிறப்பு எழுத்தாகவும் **(Special Character)** மற்றவை எழுத்தாகவும் **(Letter)** இருக்க வேண்டும்.
7. கடவுச்சொல்லை மீண்டும் உறுதி செய்யவும்.


சமர்ப்பிக்கும் முன் உங்கள் அனைத்து விவரங்களையும் சரிபார்க்கவும், நீங்கள் வழங்கிய விவரங்களை பின்னர் மாற்ற முடியாது, ஏனெனில் அனைத்து எதிர்கால தகவல்களும் வழங்கப்பட்ட மின்னஞ்சல் ஐடி மற்றும் மொபைல் எண்ணுடன் பகிரப்படும், தயவுசெய்து அவற்றை இருமுறை சரிபார்க்கவும், தவறான விவரங்களை வழங்கினால் உங்கள் கணக்கைப் பயன்படுத்த முடியாமல் போகலாம். இந்த விவரங்களை முடித்த பின் "Save" என்ற பட்டனை கிளிக் செய்யவும். நீங்கள் இன்னும் தொடர விரும்புகிறீர்களா? இதில் Yes என்ற பட்டனை கிளிக் செய்து மீண்டும் தொடரவும்.




அப்பொழுது உங்கள் திறன்பேசிக்கு **(Smart Phone)** ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொல் **(OTP)** வரும் அதை கீழ்க்கண்ட திரையில் எண்ணை "Enter One Time Password (OTP)" என்பதில் பதிவு செய்யவும், பின்பு **"Submit"** என்பதை கிளிக் செய்யவும்.





இப்போது கீழ்க்காணும் இணைய பக்கம் கணினி திரையில் தோன்றும். நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரி **(Email Id)** மற்றும் கடவுச்சொல்லை **(Password)** பயன்படுத்தி உள்நுழைவு **(Login)** செய்து கொள்ளலாம்.





இப்பொழுது உள்நுழைவு **(Login)** செய்தால் கீழ்க்கண்ட கணினி திரை தோன்றும்.








## 1. தனிப்பட்ட விவரங்களை பதிவு செய்தல்

தற்போது **தனிப்பட்ட விவரங்கள்** பதிவுக்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். இதில் மாணாக்கர் பெயர், பெற்றோர் / பாதுகாவலர் பெயர், தொடர்பு முகவரி, சொந்த மாவட்டத்தின் குடிமை நிலை, பாலினம், பிறந்த தேதி, தாய்மொழி போன்ற விவரங்களை கட்டாயமாக பிழையின்றி பதிவு செய்ய வேண்டும்.




இதில் மாணாக்கர் நிரந்தர முகவரி, மாநிலம், மாவட்டம், குடியுரிமை, மதம், வகுப்பு, உட்பிரிவு, மாணாக்கர் ஆதார் எண் (விரும்பினால்) கட்டாயமாக பிழையின்றி பதிவு செய்ய வேண்டும்.




இதில் மாணாக்கர் அஞ்சலக குறியீட்டு எண், சொந்த மாவட்டம் போன்ற விவரங்களை கட்டாயமாக பிழையின்றி பதிவு செய்ய வேண்டும்.





இந்த விவரங்களை முடித்த பின் "Save & Continue" என்ற பட்டனை கிளிக் செய்யவும். தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான முதல் படிநிலை நிறைவடைந்துள்ளது.

**2. சிறப்பு ஒதுக்கீட்டு தகவல்கள்களை பதிவு செய்தல்.**

தற்போது **சிறப்பு ஒதுக்கீட்டு தகவல்** பதிவுக்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். இதில் மாற்றுத்திறனாளி / சிறந்த விளையாட்டு வீரர்?/ தமிழ்நாடு பூர்வீக முன்னாள் இராணுவ வீரர் மகன்/மகள்?/ தேசிய மாணவர் படை (A) or (B) சான்றிதழ் பெற்றவரா?) மற்றும் என்.எஸ்.எஸ் (நாட்டு நலப்பணித் திட்ட 7 நாள் சிறப்பு முகாம் சான்றிதழ் பெற்றவரா?/ போன்ற பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தேவையானவற்றை தேர்வு செய்ய வேண்டும்.

- Whether you are a candidate under quota for Eminent Sports person?: Yes / No (ஆம்/இல்லை)
  (சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் நீங்கள் விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா?) :
  Level of Participations: District / Divisional / State / National / International / None of the above
- Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible)? : Yes / No (ஆம்/இல்லை)
  (முன்னாள் படைவீரர்கள் (இராணுவம்/கடற்படை/விமானப்படை மட்டுமே தகுதியுடையவர்கள்))
- Differently Abled Person (மாற்றுத்திறனாளி?): Yes / No (ஆம்/இல்லை)
  Select Disabilities (எத்தகைய மாற்றுத்திறன்): Yes / No (ஆம்/இல்லை)
- Are you NCC (B or C) Certificate Holder at College (UG Degree) Level?
  (தேசிய மாணவர் படை (A) or (B) சான்றிதழ் வைத்திருப்பவரா?) Yes / No
- NSS (7 Days Special Camp Certificate Holder at College (UG Degree) Level) level?
- (நாட்டு நலப்பணித் திட்ட 7 நாள் சிறப்பு முகாம் சான்றிதழ் வைத்திருப்பவரா?)


2. Special Reservation Information(சிறப்பு ஒதுக்கீட்டு தகவல்)

* Whether you are a candidate under quota for Eminent Sports person?
(சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் நீங்கள் விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா?)
Yes No

* Level of Participation (பங்கேற்பு நிலை):
District

* Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible)
(முன்னாள் படைவீரர்கள் (இராணுவம்/கடற்படை/விமானப்படை மட்டுமே தகுதியுடையவர்கள்))
Yes No

* Differently Abled Person (மாற்றுத்திறனாளி?):
Yes No

* Are you a NCC (B or C) Certificate Holder at college (UG Degree) level? (தேசிய மாணவர் படை (B or C) சான்றிதழ் வைத்திருப்பவரா?):
Yes No


* NSS (7 Days Special Camp Certificate Holder at College (UG Degree) Level) level?
(என்.எஸ்.எஸ் (நாட்டு நலப்பணித் திட்ட 7 நாள் சிறப்பு முகாம் சான்றிதழ்) வைத்திருப்பவரா?)
Yes No

விளையாட்டுப் பிரிவினர்கள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றிக்கான சிறப்பு பிரிவிற்கு விண்ணப்பிக்கும் பொழுது, மாணாக்கர்கள் தங்களின் இளநிலை பட்டப் படிப்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும். இந்த விவரங்களை முடித்த பின்

"Save & Continue" என்ற பட்டனை கிளிக் செய்யவும். தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான இரண்டாம் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.


### 3. கல்வித்தகுதி விவரங்களைப் பதிவு செய்தல்

தற்போது **கல்வித்தகுதி** பதிவுக்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். இதில் கற்பித்தல் மொழி (இளநிலை), நீங்கள் எஸ்.எஸ்.எல். சி. நிலை வரை தமிழ் படித்திருக்கிறீர்களா?), கல்வித் தகுதி), இளநிலை பட்டப்படிப்பு, இளநிலை முதன்மைப் பாடம், மதிப்பீட்டு முறை, நீங்கள் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பில் ஒரே முதன்மைப் பாடத்தை படித்திரிக்கிறீர்களா?, முதுநிலை பட்டப்படிப்பு, முதுநிலை முதன்மைப் பாடம், PG-மதிப்பீட்டு முறை, B.Ed. க்கு விண்ணப்பிக்கப்பட வேண்டிய பாடநெறி, அதிகபட்ச கல்வித் தகுதி முறை போன்ற விவரங்களை கட்டாயமாக பிழையின்றி பதிவு செய்ய வேண்டும். இந்த விவரங்களை முடித்த பின் "Save & Continue" என்ற பட்டனை கிளிக் செய்யவும். தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான மூன்றாம் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.



## 4. பட்டப்படிப்பு மதிப்பெண்கள் பதிவு செய்தல்

தற்போது முந்தைய பதிவில் தங்கள் தேர்வு செய்த ***தேர்வு முறை*** மற்றும் ***மதிப்பீட்டு முறையின்*** அடிப்படையில், **பட்டப்படிப்பு மதிப்பெண்கள்** பதிவுக்கான இணையதள பக்கம் தங்களது கணினியில் தெரிய வரும்.


4. Degree Marks (பட்டப்படிப்பு மதிப்பெண்கள்)

UG Degree Marks/Grade Table


| Subjects (பாடங்கள்) | Total Number of Subjects (மொத்த பாடங்களின் எண்ணிக்கை) | Total Maximum Marks / Credits (ஒட்டு மொத்த அதிகபட்ச மதிப்பெண்கள் / தரப்புள்ளிகள்) | Total Obtained Marks / Credits (தாங்கள் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் / தரப்புள்ளிகள்) | Percentage of Marks / CGPA (மதிப்பெண் விழுக்காடு / ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி) |
|---|---|---|---|---|
| Part I (பகுதி - 1) | | | | |
| Part II (பகுதி - 2) | | | | |
| Part III (பகுதி - 3) | | | | |
| Part IV (பகுதி - 4) | | | | |
| Part V (பகுதி - 5) | | | | |



## UG Major Subject (இளநிலை முதன்மைப் பாடம்)

| Subjects | Total Number of Subjects மொத்த பாடங்களின் எண்ணிக்கை | Total Maximum Marks / Credits ஒட்டு மொத்த அதிகபட்ச மதிப்பெண்கள் / தரப்புள்ளிகள் | Total Obtained Marks / Credits தாங்கள் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் / தரப்புள்ளிகள் | Percentage of Marks / CGPA மதிப்பெண் விழுக்காடு / ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி |
|---|---|---|---|---|
| Part I (பகுதி – 1) | | | | |
| Part II (பகுதி – 2) | | | | |
| Part III (பகுதி – 3) | | | | |
| Part IV (பகுதி – 4) | | | | |
| Part V (பகுதி – 5) | | | | |

## PG Major Subject (முதுநிலை முதன்மைப் பாடம்) Only for PG Students


PG Degree Marks/Grade Table


| Total Number of Subjects (மொத்த பாடங்களின் எண்ணிக்கை) | Total Maximum Marks / Credits (ஒட்டு மொத்த அதிகபட்ச மதிப்பெண்கள் / தரப்புள்ளிகள்) | Total Obtained Marks / Credits (தாங்கள் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் / தரப்புள்ளிகள்) | Percentage of Marks / CGPA (மதிப்பெண் விழுக்காடு / ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி) |
|---|---|---|---|
| Total subject is required | Maximum Mark/CGPA is required | Obtained Mark/CGPA is required | Percentage of Mark/CGPA is required |

| Total Number of Subjects மொத்த பாடங்களின் எண்ணிக்கை | Total Maximum Marks / Credits ஒட்டு மொத்த அதிகபட்ச மதிப்பெண்கள்/ தரப்புள்ளிகள் | Total Obtained Marks / Credits தாங்கள் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள்/ தரப்புள்ளிகள் | Percentage of Marks / CGPA மதிப்பெண் விழுக்காடு / ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி |
|---|---|---|---|
| | | | |


இந்த விவரங்களை முடித்த பின் "Save & Continue" என்ற பட்டனை கிளிக் செய்யவும். தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான நான்காம் படிநிலை நிறைவடைந்துள்ளது.

### 5. முன்னோட்ட பகுதி

தற்போது **முன்னோட்ட விவரங்களை பார்ப்பதற்கு** இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். தனிப்பட்ட தகவல், சிறப்பு ஒதுக்கீட்டு தகவல், பட்டப் படிப்பு பற்றிய தகவல், பட்டப்படிப்பு மதிப்பெண்கள் பற்றிய தகவல் மற்றும் கல்லூரிகளை தேர்வு செய்தல் போன்ற விவரங்களை சரிபார்த்தபின் “Continue to Pay” என்ற பட்டனை கிளிக் செய்யவும்.


**1. Personal Information**

| Name | Name of the Parent/Guardian | Communication Address | Permanent Address |
|---|---|---|---|
| Sukumar Palanisamy | Palanisamy | 60/82 Dhanalakshmi Nagar, Siddhapudur, Coimbatore -641044 | 60/82 Dhanalakshmi Nagar, Siddhapudur, Coimbatore -641044 |
| **Alternate mobile number** | **State** | **District** | **Taluk** |
| 9600952245 | Tamil nadu | Coimbatore | Coimbatore(South) |
| **Communication address pincode** | **Native District** | **Civic status of Native Place** | **Date of Birth (DD-MM-YYYY)** |
| 641044 | Coimbatore | Municipality | 17-08-2000 |
| **Gender** | **Mother Tongue** | **Nationality** | **Religion** |
| Female | Tamil | Indian | Hindu |
| **Name of the Community** | **Name of the Caste** | **Aadhar Number (optional)** | |
| SCA | Arunthathiyar | -- | |





நீங்கள் பணம் செலுத்தத் தொடங்குகிறீர்கள், பணம் செலுத்தியவுடன் முந்தைய திரையில் நீங்கள் வழங்கிய விவரங்களை உங்களால் மாற்ற முடியாது, எனவே பணம் செலுத்தும் முன் அனைத்து விவரங்களையும் இருமுறை சரிபார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவரங்களை தேர்வு செய்த பின் "Continue" என்ற பட்டனை கிளிக் செய்யவும். தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான ஆறாம் படிநிலை நிறைவடைந்துள்ளது.

6. **பதிவு கட்டணம் பகுதி**

இதில் நீங்கள் கொடுத்த தகவலின்படி (பதிவுக் கட்டணத் தொகை) எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை காட்டும். இந்தத் தொகையை பற்று அட்டை (Debit Card) / கடன் அட்டை (Credit Card) / இணைய வழி வங்கிக் கணக்கு (Internet Banking), மற்றும் யுபிஐ (UPI யை தேர்ந்தெடுத்து Google Pay, Paytm வழியாக) மூலமாக செலுத்தவேண்டும், (விண்ணப்பக் கட்டணம் இணைய வழியாக மட்டுமே செலுத்த முடியும்). இதை செய்வதற்கு "Pay" என்பதை கிளிக் செய்யவும். பின்பு அதற்கான கட்டணம் செலுத்துவதற்கான வங்கியின் திரை (Gateway) உங்கள் கணினியில் தோன்றும். இதில், தொகையை செலுத்தி முடித்தவுடன் உங்கள் செல்பேசிக்கு விண்ணப்ப எண்ணும், பரிவர்த்தனை ஐடியும் அனுப்பப்படும், மேலும் பரிவர்த்தனை ரசீதை அச்சிட்டுக்கொள்ளலாம் (Print). மீண்டும் முகப்பு பக்கத்திற்கு செல்ல Home page என்பதை கிளிக் செய்ய வேண்டும். தற்போது விண்ணப்பக் கட்டணம் பதிவு செய்தலுக்கான ஏழாம் படிநிலை நிறைவடைந்துள்ளது.




## 7. விண்ணப்ப படிவம் தரவிறக்கம் செய்தல்

விண்ணப்பத்தை சமர்ப்பித்தப்பின் கீழ்க்காணும் திரை தோன்றும். இப்போது **"Download now"** என்பதில் கிளிக் செய்தால், உங்கள் முழு விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்யப்படும். இத்துடன் நீங்கள் முறையாக விண்ணப்பிக்க வேண்டியது நிறைவு பெறும்.

GOVERNMENT OF TAMIL NADU
DIRECTORATE OF COLLEGIATE EDUCATION
GOVERNMENT AND GOVERNMENT-AIDED COLLEGES OF EDUCATION ADMISSION FOR B.Ed. COURSES -

Application for Admission to Arts and Science B.Ed. Degree Course

**Application Number:** 900883

## Personal Information

**Name:** MENAKA K
**Name of the Parent/Guardian:** KULANTHAIVEL
**Communication Address:** .
**Permanent Address:**
**Alternate mobile number:**
**State:** Tamil nadu
**District:** Erode
**Taluk:** Anthiyur
**Communication address pincode:** 638311
**Native District:** Erode
**Civic status of Native Place:** Town Panchayat
**Date of Birth (DD-MM-YYYY):** 03-07-2003
**Gender:** Female
**Mother Tongue:** Tamil
**Nationality:** Indian
**Religion:** Hindu
**Name of the Community:** MBC & DNC
**Name of the Caste:** Maruthuvar, Navithar, Mangala, Velakattalavar, Velakatalanair and Pronopakari
**Aadhar Number (optional):**

## Special Reservation Information

**Whether you are a candidate under quota for Eminent Sports person?:** No
**Level of Participation:** --
**Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible):** No
**Differently Abled Person:** No
**Differently Abled Type:** --
**Are you a NCC (B or C) Certificate Holder at college (UG Degree) level?:** No
**NSS (7 Days Special Camp Certificate Holder at College (UG Degree) Level) level?:**
Y

## Academic Information

**Medium of Instruction (UG):** English
**Have you studied Tamil upto SSLC level ?:** Yes
**Education Qualification:** Under Graduate
**UG Degree:** B.A / B.Lit
**UG Major Subject:** English Literature
**UG Exam Assessment method:** Grade
**Course applied for B.Ed. :** English
**Highest Qualifications:** UG

## Degree Marks

### UG Degree Marks/Grade Table

| Subject | Total Number of Subjects | Total Maximum Marks / Credits | Total Obtained Marks / Credits | Percentage of Marks / CGPA |
|---|---|---|---|---|
| Part I | 7 | 700 | 436 | 63 |
| Part II | 7 | 700 | 451 | 65 |
| Part III | 7 | 700 | 438 | 63 |
| Part IV | 7 | 700 | 409 | 59 |
| Part V | 5 | 500 | 315 | 63 |

**GOVERNMENT OF TAMIL NADU**
**DIRECTORATE OF COLLEGIATE EDUCATION**
**GOVERNMENT AND GOVERNMENT-AIDED COLLEGES OF EDUCATION ADMISSION FOR B.Ed. COURSES**

**Application for Admission to Arts and Science B.Ed. Degree Course**

**Application Number: 900883**

Affix recent Passport size Photo

## DECLARATION BY THE APPLICANT

I, MENAKA K (Son / Daughter) of KULANTHAIVEL hereby solemnly declare that the information furnished and the statements given in the application and the enclosures are true, correct and complete. I further declare that should it be found otherwise, I will be liable to forfeit my seat and / or removal from the rolls of the Institution at whatever stage of study I may be, besides making me liable for criminal prosecution. I am fully aware that as per the directions of the Hon'ble Supreme Court of India and Tamil Nadu Prohibition of Ragging Act 1997, Ragging is an offence, as is banned in the Institutions and anyone indulging in ragging is liable to be punished such as expulsion from the Institutions and / or rigorous imprisonment up to 3 years, and / or fine up to Rs.25,000/-

Place:

Date: ( Signature of the Applicant )

## DECLARATION BY THE PARENT/ GUARDIAN

I, KULANTHAIVEL (Parent / Guardian) of MENAKA K hereby solemnly declare that I am fully aware of the declaration made by the applicant, and I declare and bind myself on the same terms contained in the above declaration. The statements and the information given are true, correct and complete. If it is found otherwise, the applicant is liable to forfeit the seat and / or removal from the rolls of the Institution at whatever may be the stage of study, besides making me liable for criminal prosecution I am fully aware that as per the directions of the Hon'ble Supreme Court of India and Tamil Nadu Prohibition of Ragging Act 1997,Ragging is an offence, as is banned in the Institutions and anyone indulging in ragging is liable to be punished such as expulsion from the Institution and / or rigorous imprisonment up to 3 years, and / or fine up to RS. 25,000/-

Place:

Date: ( Signature of Parent / Guardian )

Note: Guardian can execute the above declaration, only if both the parents are not alive.

**GOVERNMENT OF TAMIL NADU**
**DIRECTORATE OF COLLEGIATE EDUCATION**
**GOVERNMENT AND GOVERNMENT-AIDED COLLEGES OF EDUCATION ADMISSION FOR B.Ed. COURSES –**

**Application for Admission to Arts and Science B.Ed. Degree Course**

**Application Number: 900883**

**The following original certificates have to be produced at the time of certificate verification. Venue, Date and Time will be communicated through SMS & Email to the registered Mobile number and Email Id.**

1. Transfer certificate
2. 10th Mark Sheet
3. 12th Mark Sheet
4. Degree Certificate/ Provisional Degree Certificate
5. Permanent Community Certificate Card for MBC & DNC (Permanent card / Electronic form / Digitally Signed E-Certificate)
6. Special Reservation Form for Sports and relevant certificates
7. Special Reservation Form for Ex-Serviceman and relevant certificates
8. Special Reservation Form for Differently Abled and relevant certificates
9. Special Reservation Form for NCC-'B or C' Certificate holders and relevant Certificates

**Printout of the application, Signed declaration and photocopies of all the above mentioned certificates need to be submitted at the time of Admission**

**GOVERNMENT OF TAMIL NADU**
**DIRECTORATE OF COLLEGIATE EDUCATION**
**GOVERNMENT AND GOVERNMENT-AIDED COLLEGES OF EDUCATION ADMISSION FOR B.Ed. COURSES –**

**Application for Admission to Arts and Science B.Ed. Degree Course**

**Application Number: 900883**

**Choices Selected**

| District | Course Id | Course Name | College Name | College Code | Preference Order |
|---|---|---|---|---|---|
| Namakkal | 2 | B.Ed. English | Government College of Education, Komarapalayam, Namakkal - 638183 | 103 | 1 |

### 8.சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்தல்:

விண்ணப்பதாரர்கள் தங்களது தேவையான சான்றிதழ்களை இணையதளத்தில் நேர்மையாகவும் முழுமையாகவும் பதிவேற்றம் செய்ய வேண்டும். இதில், சிறப்பு ஒதுக்கீட்டிற்கான சான்றிதழ்கள் (மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர், விளையாட்டு வீரர்கள், தேசிய மாணவர் படை – NCC, நாட்டு நலப்பணித் திட்டம் – NSS 7 நாட்கள் முகாம்) தகுதியுள்ள விண்ணப்பதாரர்களால் பதிவேற்றப்பட வேண்டும். இவற்றுடன், இளங்கலை ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் (UG Consolidated Mark Statement) கட்டாயமாகும். மேலும், முதுகலை ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் (PG Consolidated Mark Statement), M.Phil/Ph.D. சான்றிதழ்கள் போன்றவை விருப்பமானவை. அதேபோல், வகுப்பு சான்றிதழ் (Community Certificate) மற்றும் தேவைக்கேற்ப பிற சான்றிதழ்களும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.